1993 டிசம்பர் 30]

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடந்தோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பல ஊராட்சிகளுக்கு டி. வி. பெட்டிகளைக் கொடுத்தாலும் எல்லா ஊராட்சிகளுக்கும் இந்த வகையில் டி. வி. பெட்டிகள் சென்று அடையும்வரை நாகமங்கலம் குக்கிராமத்தில் வானொலிப் பெட்டியும், வானொலி மன்றக் கட்டிடமும் அமைத்துத்தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகமங்கலம் அடங்கிய ஆலங்குடி ஊராட்சியில் ஏற்கெனவே இரண்டு வானொலிப் பெட்டிகள் மக்கள் பயனுக்கு அரசு வழங்கி இருக்கிறது. அப்படி இருந்தாலும். நாகமங்கலம் குக்கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடம் அமைத்துத்தர ஆலங்குடி ஊராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும், மேலும் வானொலி மன்றக் கட்டிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் ஊராட்சியில் ஏது மில்லை என்ற காரணத்தாலும் இது தற்போது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட ஊராட்சியில் நிதி ஆதாரம் இடம் கொடுக்கின்ற பட்சத்தில் வானொலி மன்றக் கட்டிடமும் வானொலிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 98, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

98—

ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு பாய், தலையணை வழங்குதல்.

*21327—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

— அரசினர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் தங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பாய், தலையணை ஆகியன கொடுக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு தலைவரவர்களே,

அரசு ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாய் வழங்கப்படுகிறது. தலையணை வழங்கப்படுவதில்லை.

முற்பகல் 11–05

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சிக் காலத்தில், விதியினை வென்றிடும் வழி தெரியாமல் காலம் வரட்டும் என்று காத்திருக்கும் பொறுமையின் திருவுருவங்களாக இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்குத் தற்போது பாய்கள் கொடுக்க நிதி இல்லை என்று கூறுகிறார்கள். அதை உடனடியாகக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை என்ற முறைப்படி அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மாணவர்களுக்குப் பாய்கள் வழங்கப்படுவதாகக் கூறினார்கள். 1971 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை சென்னையிலே இருக்கின்ற அரசுக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் பயின்றவன் நான். தமிழகத்தில் இதுவரையில் எந்தப் பள்ளியினுடைய விடுதியிலும் பாய்கள் வழங்கப்படுவதில்லை. அப்படி ஒரு உத்தரவு இருக்கிறது. அந்தப் பள்ளியில் சேருகிற குழந்தைகளே அவைகளைக் கொண்டு வரவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு, அவர்கள் பாய், பெட்டி போன்றவைகளைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். சாப்பிடுகின்ற தட்டுகளையும் அந்தக் குழந்தைகள் தான் கொண்டு வருகிறார்கள். சென்னையில் இருக்கிற எம். சி. ராஜா விடுதியில், காங்கிரஸ் ஆண்டபோது சில்வர் பிளேட்டுகள் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னால் வந்த ஆட்சிக் காலத்திலே அந்தத் தட்டுகளையும் பறிமுதல் செய்துவிட்டார்கள். இப்படித் தமிழகத்திலே இருக்கின்ற விடுதிகளில்—அது பிற்பட்டோர் நல விடுதியாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பயிலுகின்ற விடுதிகளாக இருந்தாலும்—பேசிக் அமெனிட்டீஸ் என்று சொல்

கின்ற எந்த அடிப்படை வசதிகளும் இதுநாள் வரை இல்லை. நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நந்தனத்தில் இருக்கிற எம். சி. ராஜா விடுதிக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திடீரென்று விஜயம் செய்தால் தெரியும். மாணவர்கள் உள்ளே செல்லக்கூட முடியாத அளவுக்கு துர்நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது. சுத்தம் இல்லை. (குறுக்கீடு) பாய் இல்லை. ஆகவே இவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த மாணவர்களுக்கு உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம். சி. ராஜா ஹாஸ்டலை நான் பார்வையிட்டேன். உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகளை எல்லாம் பொதுப்பணித்துறை மூலம் நிவர்த்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். மேலும் அரசாணை எண் 796, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23–5–1989-ல் உத்தரவிடப்பட்டு, ஒரு பாயின் விலை ரூ. 15 என்று ஆணையிட்டு அது 60 அங்குல நீளம், 30 அங்குல அகலம் என்ற அளவில் இருக்க வேண்டும் என்றும் ஆணையிட்டு செயல்படுத்தி வருகிறோம். காங்கிரஸ் ஆட்சியில் சில்வர் தட்டு வழங்கியதாகச் சொல்கிறார்கள். நான் கூட காங்கிரஸ் ஆட்சியில் 1965—ல் படித்திருக்கிறேன். நானும், தட்டும், தலையணையும், பாயும் வாங்கிச் சென்றிருக்கிறேன். இதை என் அனுபவத்தில் சொல்கிறேன். அப்படி ஒரு சில்வர் தட்டை காங்கிரஸ் ஆட்சியில் பார்த்ததே இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) சில்வர் தட்டு என்றால் வெள்ளித் தட்டு என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். தங்கவேல்.

திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துணைக் கேள்விக்கு முன்னால், எங்களை கிழக்காசிய நாடுகளுக்கு அனுப்பி வைத்த, என்னைப் பெறாமல் பெற்றெடுத்த என் அன்னை, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியையும், அதே போல இங்கே எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிற இப்பேரவையின் தலைவரான தங்களுக்கு என் நன்றியையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். விடுதிகளிலே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு இப்போது பாயும், தலையணையும் நமது தமிழக அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது குளிர் காலமாக இருப்பதால், அவர்களுக்குக் கூடுதலாக பெட்ஷீட் கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 டிசம்பர் 30

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பவானிசாகர் பகுதியில் நான் இரண்டு ஹாஸ்டல்களைப் பரிசோதனை செய்தேன். பாயும், தலையணையும் புத்தம் புதியதாகக் கட்டுக் கட்டாக ஒவ்வொரு மாணவர்க்கும் அங்கே கொடுக்கப்பட்டது என்பதை நான் முதலில் நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றை மட்டும் நான் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். ஆதி திராவிட பழங்குடியினர் நலத்துறை மூலம் நடக்கின்ற அந்த ஹாஸ்டல்களில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களையே வார்டர்களாக நியமிக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் நேர்மாறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை மாற்றி பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை தயவுசெய்து வார்டர்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியமித்தால் கொஞ்சம், இன்னும் கூடுதலான பாதுகாப்பு அந்த மாணவர்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்து, அதை மாற்றி அமைப்பதற்கான வழி வகைகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—30

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் இருப்பதுதான் சரியானதாக இருக்கும் என்று அரசு கருதுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்து, அந்த மக்களுக்காக பல்வேறு சலுகைகளையும் அதைப்போல அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக உண்மையிலேயே இதய சுத்தியோடு பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித நல்லாட்சியில் அந்த மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் பல்வேறு அத்தியாவசிய காரணிகளுக்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதற்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று, அதிலே பல்வேறு காரணிகளைச் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். நான் நம்முடைய மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வது, அதனை இரண்டு

1993 டிசம்பர் 30]

ஆண்டுகளுக்கு என்று வைத்துக்கொள்ளாமல், குறுகிய காலத்திலேயே வைத்து அதிகப்படியான நிதி ஒதுக்கீட்டைச் செய்து அந்த ஆதிதிராவிட சமுதாயத்தின் மக்களுக்காக பல்வேறு நிலைகளையும் சீர்படுத்திக் கொடுப்பதற்கு நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

99—

அந்தியூர் தொகுதியில் புதிய மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்குதல்.

*20445—திரு. வே. பெரியசாமி :
மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக மீன் பிடிக்கும் உரிமையை பெற்றுள்ளவர்களை நீக்கி புதியவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் பகுதியில் மீன் வளர்ப்போர்களாகச் செயல்பட்டு வரும் நபர்கள் எவருக்கும் பத்து ஆண்டுக்காலம் முடிவடையவில்லையாதலால் இவ்வினாவிற்கு இடமில்லை.